2017

2017

2017

401798

No. of Printed Pages : 4

**6972**

Register Number | | | | | | | 

**First Year**

# அறிவியல் கற்பித்தல்

# TEACHING OF SCIENCE

(Tamil Version)

நேரம் : 3 மணி — மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - அ
## (பாடப்பொருள்)

**I.** (அ) **குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். ஒவ்வொன்றுக்கும் **100** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x2=20**

1. உணவுப் பொருள்களை அவற்றின் செயல்பாடுகளின் அடிப்படையில் வகைப்படுத்துக.

2. இரத்தத்தின் பணிகள் ஏதேனும் நான்கு கூறுக.

3. இலைகளிலிருந்து பெறப்படும் மருந்துகளை பட்டியலிடுக.

4. காற்றின் பண்புகள் யாவை ?

5. காற்று மாசுபடுதலுக்கான காரணிகள் இரண்டு கூறுக.

6. நீரின் கடத்துதிறன் - விளக்குக.

[ Turn over

7. பருவ காலங்களின் அடிப்படையில் ஆடைகளை எவ்வாறு வகைப்படுத்துவாய் ?

8. உன் வீட்டில் மட்கும் மற்றும் மட்காத கழிவுப் பொருள்களை எவ்வாறு மேலாண்மை செய்வாய் ?

9. பதங்கமாதல் வினையை ஓர் எடுத்துக்காட்டுடன் விளக்குக.

10. நுண்புழை ஏற்றத்தை படம் வரைந்து விளக்குக.

## (கற்பிக்கும் முறை)

(ஆ) **அனைத்து** வினாக்களுக்கும் **100** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x2=20**

11. தொடக்க நிலையில் அறிவியல் கற்பிப்பதன் நோக்கங்கள் இரண்டு கூறுக.

12. கற்பவர் மையமான முறை என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

13. அறிவியல் முறையில் கற்போருக்கு உதவிடவும், வழிகாட்டவும் ஆசிரியரின் பங்கு நான்கினை மட்டும் எழுதுக.

14. அறிவியல் முறையில் ‘கருதுகோள்’ என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

15. ஒப்படைவு முறையின் நோக்கங்கள் யாவை ?

16. ‘வீட்டு ஒப்படைவுகள்’ - குறிப்பு வரைக.

17. ‘செயல்வழிக் கற்றல் அணுகுமுறை’ – விளக்கம் தருக.

18. கற்பித்தலில் பயன்படும் அளவீட்டுக் கருவிகள் யாவை ?

19. ஒரு தேர்வை எவ்வாறு மதிப்பீடு செய்வாய் ?

20. குறுவினா வகையின் நம்பகத்தன்மையை அதிகரிக்கும் சில பொதுவிதிகளைக் கூறுக.

## பகுதி - ஆ

## (பாடப்பொருள்)

II. (அ) எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 5x4=20

21. உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வதால் ஏற்படும் தீய விளைவுகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

22. இரத்தத்தின் அமைப்பை விளக்குக.

23. வீட்டு விலங்குகளையும் அவற்றால் நமக்கு ஏற்படும் நன்மைகளையும் அட்டவணைப்படுத்துக.

24. 'வளிமண்டல அழுத்தம்' – குறிப்பு வரைக.

25. 'வளர்ந்துவரும் நீர்த்தேவை, குறைந்துவரும் நீர் ஆதாரங்கள்' இவற்றைக் கருத்தில் கொண்டு நீரை எவ்வாறெல்லாம் சேமிப்பாய் ?

26. ''ஆடை மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்று'' - விவாதிக்கவும்.

27. கண்ணாடியில் சேர்க்கப்படும் நிறமூட்டும் பொருள்களையும் அதனால் கிடைக்கும் நிறத்தையும் குறிப்பிடுக.

28. கழிவுப் பொருள் மேலாண்மை பற்றி எழுதுக.

## (கற்பிக்கும் முறை)

(ஆ) எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். 5x4=20

29. பெஞ்சமின் புளூமின் கற்பிக்கும் நோக்க வகைப்பாட்டைக் கூறுக.

30. ஆண்டர்சன், ரத்ஹோல் திருத்தியமைத்த அறிவுசார் நிலையை ஓர் உதாரணம் தந்து விளக்குக.

31. அறிவியல் முறையின் முதல்படி நிலையான 'பிரச்சனையை உணர்தல்' என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

32. அறிவியல் முறையின் வரம்புகள் யாவை ?

33. செய்துகற்றல் மாதிரியின் படம் வரைந்து படிநிலைகளைக் குறிப்பிடுக.

34. அறிவியல் கற்பித்தலில் கருத்தரங்க முறையின் சிறப்பியல்புகளை விளக்குக.

35. 'அளவீடு', 'மதிப்பீடு' - இவற்றை வேறுபடுத்துக.

36. மதிப்பீட்டுக் கூறுகளின் அடிப்படையில் ஒரு செய்முறைத்தேர்வை எவ்வாறு மதிப்பிடுவாய் ?

## பகுதி - இ

III. **இரண்டு** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் **500** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **2x10=20**

37. (அ) ''செய்துகற்றல்'' முறையின் படிநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) ''மிதத்தல் விதிகளைச் சரிபார்த்தல்'' என்ற 8 -ஆம் வகுப்பு பாடப் பகுதியை ஒப்படைவு முறை பயன்படுத்தி எவ்வாறு கற்பிப்பாய் ?

38. (அ) செயல்வழிக்கற்றல் அணுகுமுறையில் வகுப்பறை நிகழ்வுகளை தொகுத்து எழுதுக.

**அல்லது**

(ஆ) அறிவியல் வினாத்தாள் வடிவமைப்பை (Blue Print) ஓர் எடுத்துக்காட்டுடன் விவரி.

-oOo-